வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2019

வழக்கு சாட்சி - DW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வேலுச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | திருமூர்த்தி கவுண்டர் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11.02.2026.

**முதல் விசாரணை :** **நாள் : 11.02.2026.**

1) நான் 2005 ஆம் வருடத்தில் குமரன் கார்டன் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்த வருகிறேன். கடந்த 2018 ஆம் வருடம் 9 வது மாதம் தேதி சரியாக ஞாபகமில்லை நான் கிரையம் செய்த சைட் போட்டு வைத்திருந்த இடத்தை சங்கீதாவின் கணவர் செல்வராஜ் என்வர் 10 நாட்களுக்கு முன்பு 105 சைட்டில் ஒரு சைட்டை பார்த்தார் அதில் 30 அடி ரோட்டில் இருந்த சைட்டை பார்த்து கிரையம் கேட்டார் அதை நான் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துவிட்டு விற்பனைக்கு மறுத்துவிட்டேன். சுமார் 10 நாட்கள் கழித்து அவர்மனைவியுடன் வந்த நான் தற மறுத்த இடத்தில் உள்ள கம்பி வேலியை அறுத்துக்கொண்டிருந்தார் அந்த நேரத்தில் நான் சென்று கேட்டப்போது என்னை கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார் நான் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்போது நான் அப்படி தான் செய்வேன் என்று சொன்னார்.

2) என்னை தகாத வார்த்தை பேசிக்கொண்டே செல்வராஜ் எட்டி உதைத்து விட்டார். அருகில் இருந்த என் மகனும் ஏன் இவ்வாறு கெட்டவார்த்தை சொல்லி திட்டி கீழே தள்ளினிர் என்று கேட்டார் அப்போது என்னை நெஞ்சில் உதைத்தை கீழே தள்ளிவிட்டார்.

இரண்டு இருசக்கர வாகனம் மற்றும் வேனில் சுமார் 6-7 நபர்கள் கம்பிகளுடன் வந்தார்கள். என்னை பார்த்து " இந்த ஆளை பிடித்து இழுத்து தள்ளுங்கட" என்று சொல்லிக்கொண்டே என்னையும் என் மகனையும் தள்ளிவிட்டார்கள். எங்களுக்கு வலி தாங்க முடியாமல் சத்தம்போட்டார்கள் அவர்கள் சென்றுவிட்டார்கள். என் மகன் என்னை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கு காவல் துறையினர் வந்து விசாரித்தார்கள் நான் நடந்ததை சொன்னேன்.

3) என்னை விசாரித்த காவல் துறையினர் சிகிச்சைக்கு பின்னிட்டு காவல் நிலையத்திற்கு வந்த நேரில் ஆஜராகி புகார் கொடுக்க சொன்னார்கள். பின்னிட்டு நான் இரண்டு நாட்கள் கழித்து என்று நினைக்கிறேன் ஆனால் புகார் கொடுத்துவிட்டேன். எனது புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார். அந்த முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **எ.த.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் வைத்து விசாரணை அதிகாரி அவர்களும் புகார் கொடுத்தார்கள் அதற்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவே இரு தரப்பினரும் நீதிமன்றத்தை நாடுமாறு அறிவுறுத்தி அனுப்பிவிட்டார். எனது முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் இன்றைய தேதி வரையிலும் வழக்கு கோப்பிற்கு எடுக்கபடாமல் காவல் துறையினர் வைத்துள்ளனர்.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

அரசு தரப்பின் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.02.11 17:18:07 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.